**செம்பாக்கம் நகராட்சியில் 31.7.2019ம் நாள் புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. மு.ரா. வசந்தி**
**தனி அலுவலர் / ஆணையாளர்,**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுலை **2019** மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.510** **பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சியில் **2019-2020** ம் நிதியாண்டிற்கு ரூ.**5.00** இலட்சம் மதிப்பீட்டில் MCC/OCC இரண்டு **5.00** டன் கொள்ளளவு கொண்ட பசுமை நுண்ணுயிர் உரக்கூடம், **6** சிறிய உரக்கூடங்குகளுக்கு தேவையான உயரிகலவைகள் தயாரிக்க தேவைப்படும் வெல்லம், தயிர், தவிடு, உமி மற்றும் மரத்தூள்கள் வாங்கி உரம் தயாரிக்க மற்றும் உரக்கூடங்களில் ஏற்படும் பராமரிப்பு இதர செலவினங்களை மேற்கொள்ளுதல் பணி மற்றும் RRC உலர் கழிவு சேகரிப்பு மையத்திற்கு தேவையான பேலிங் பொருட்கள் சப்ளை செய்ய ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் இப்பொருள் சார்ந்து பலமுறை நேரில் தெரிவித்தும், தொலைபேசி வாயிலாக தெரிவித்தும் தங்களிடமிருந்து எவ்வித முகாந்திரமும் வரப்பெறவில்லை. எனவே, திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு அத்தியாவசிய மூல பொருட்களை பெறுவதில் தடை ஏற்பட்டு உரம் தயாரிக்கும் பணி தடைப்பட்டுள்ளது. எனவே, மேற்படி ஆண்டு ஒப்பந்தப்புள்ளியினை இவ்வலுவலக **19.6.2019**ம் தேதியில் உத்திரவின் மூலம் ஆண்டு ஒப்பந்தம் இரத்து செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, இத்தலைப்பின் கீழ் மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.511** **அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத பகுதியாக (ODF) அறிவிப்பு செய்வதற்கு மூன்றாம் தரப்பு நிறுவனம் (TPI) மூலம் தெரிவிக்கப்பட்ட ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள கீழ்காணும் இடங்களில் நகராட்சியின் மூலம் ஆய்வு செய்யப்பட்டது.

1. வேளச்சேரி தாம்பரம் பிரதான சாலை.

2. காமராஜபுரம் மெயின் ரோடு.
3. ராஜகீழ்பாக்கம் ஏரிப்பகுதி.

இவ்விடங்களில் திட்ட நெறிமுறைகளின் படி தெரிவிக்கப்பட்டுள்ள அளவீடுகளின் படி பொது கழிப்பிடத்திற்கான நிரந்தர கட்டுமானம் கட்டுவதற்கான வழிவகை இல்லை. மேலும் இவ்விடங்களில் மொபைல் டாய்லட் (Mobile Toilet) இருபாலாருக்கும் தனித்தனியாக 3 இருக்கைகள் கொண்ட அமைப்பினை ஏற்படுத்தப்பட்டு பொது மக்களின் உபயோகத்திற்கு கொண்டுவரப்பட்டது. மேலும் இப்பொருள் சார்ந்து தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத பகுதியாக (ODF) 24.8.2018ம் தேதியில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மொபைல் டாய்லட் பணி நிறைவடைந்த நாள் முதலாக நகராட்சி பணியாளர்கள் மூலம் சுத்தம் செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் பராமரிப்பு பணிகளை முறையாக தொடர்ந்து மேற்கொள்ளவும், அவ்வப்பொழுது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மூன்றாம் தரப்பு நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும், மேற்படி கழிப்பிடத்தில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் தொட்டி, பைப்லைன், கழிவுநீர் தொட்டி நிரம்புவதை சுத்தம் செய்தல் ஆகிய பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, இப்பணிகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவின மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அவ்வப்பொது மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு ஏற்ப மேற்படி கழிப்பிடங்களை தூய்மையாகவும், செம்மையாகவும் பராமரிப்பு பணி மேற்கொள்ள அவசியமாகிறது. எனவே, பராமரிப்பு பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ளவும், நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.512 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

செம்பாக்கம் நகராட்சியில் 2019–20 ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் 19.7.2019 ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகள், வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் வழிபாட்டு தலங்கள், வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகிய கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்திட விழிப்புணர்வு (Multi Colour Door Stickers) அச்சிட்டு | 2.00 | எஸ். உமாராணி | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | கே. ராமதாஸ் | மதிப்பீட்டை விட 1.40% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சப்ளை செய்தல் பணி | | | |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.513 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் போதிய அளவில் தோற்றுவிக்கப்படாத காரணத்தினால், அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட குறியீட்டின் படி கூடுதல் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்களில் **130** பணியாளர்களையும் தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி K.Dis No.22043/P3/2018 Dated: 10.8.2018 ன் படி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஓர் ஆண்டிற்கு மெஸ்ஸர்ஸ் S.R. Manpower Consultancy, 464/938, TH Road, Old Washermanpet, Chennai 21 என்ற நிறுவனத்தை இந்நகர் மன்ற தீர்மானம் எண்.**348** நாள் **28.9.2018**ன் படி ஒப்புதல் அளித்ததன் பேரில், இவ்வலுவலக **24.10.2018**ம் தேதிய பணி உத்திரவின் படி மேற்படி நிறுவனம் மூலம் **1.11.2018**ம் தேதி முதல் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஓராண்டு ஒப்பந்த காலம் **31.10.2019** தேதியில் முடிவடைகிறது.

மேலும், மெஸ்ஸர்ஸ் S.R. Manpower Consultancy நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும் இப்பணி **1.11.2018** முதல் இன்று வரை எந்த வித புகாருக்கும் இடமளிக்காமல் நல்ல நிலையில் பணி செய்து வருவதாலும், மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம் **31.10.2019** உடன் முடிவடைவதாலும், தற்போது மாநில தேர்தல் ஆணையம் உள்ளாட்சி தேர்தலை நடத்த திட்டமிட்டு இல்லாதாலும், அந்த தேர்தல் நேரத்தில் மாற்று ஒப்பந்ததாரரை ஏற்படுத்திடவும், பணி மேற்கொள்ளவும் காலதாமதம் ஏற்பட்டு பணி தொடர்ந்து மேற்கொள்ள இயலாத நிலை ஏற்படக்கூடும் என்பதைக் கருத்தில் கொண்டு, திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியினை தொய்வின்றி தொடரவும், அவசர அவசியம் கருதியும் மேலும் ஒரு ஆண்டிற்கு **1.11.2019** முதல் **31.10.2020** வரை இதே விலை விகிதத்தில் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள மேற்படி நிறுவனம் மூலம் இசைவு தெரிவித்துள்ளதன் அடிப்படையில் மேலும் ஒரு ஆண்டு கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கிடவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.**208.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நவம்பர் **2019** முதல் **130** பணியாளர்களை மேலும் ஓர் ஆண்டிற்கு பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்ய புதுப்பித்தல் பணி உத்திரவு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.514 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டம். நகராட்சி பகுதியில் உருவாகும் திடக்கழிவுகளில் 50% மக்கும் கழிவுகள் 50% மக்காத கழிவுகள் என மொத்தம் 24 மெட்ரிக் டன் குப்பைகள் அன்றாடம் உருவாகிறது. இதில் மக்கும் கழிவுகள் 12 மெட்ரிக் டன் தினமும் MCC/OCC/BWG என நகராட்சி பகுதிக்குள்ளேயே உரமாக்கி அதை விவசாயிகள் பொதுமக்கள் என அனைவருக்கும் இயற்கை உரம், இலவசமாகவும், விற்பனை செய்தும் அதில் வரும் தொகையை துப்புரவுப் பணியார்களுக்கே பிரித்து வழுங்கப்பட்டு 100 % மக்கும் குப்பைகளை நகராட்சி பகுதியிலேயே அன்றாடம் கையாளப்பட்டு வருகிறது.

மக்காத, மறு சுழற்சி குப்பைகள், விற்பனைக்கு கடந்த உலர் கழிவுகளை கடைக்காரர்களிடம் நாளொன்றுக்கு 2 டன் வீதம் வாரம் 12 மெட்ரிக் டன் உலர் கழிவுகளை விற்பனை செய்து அதையும் துப்புரவு பணியாளர்களுக்கே பிரித்து வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் விற்பனைக்கு அல்லாத மறு சுழற்சிக்கு பயன்படாத, மறு பயன்பாட்டிற்கு உட்படுத்த இயலாத 12 வகையான எரியூட்டக்கூடிய கழிவுகளை பிளாஸ்டிக் பொருட்கள், மரங்கள், ரப்பர்கள், டயர்கள், ஷோபாக்கள், மெத்தைகள், தலையணைகள், கிழிந்த துணிகள், கந்தல்கள்,தேங்காய் மட்டைகள், Solid Plastic மற்றும் Lining Materials சேகரித்து வாரம் இரண்டு நாட்கள் Ultra Tech Cement கம்பெனி, அரியலூர், திருச்சிக்கு அனுப்பி வரப்பட்டது. தற்போது அங்கு அனைத்து நகராட்சிகளும் கொண்டு சேர்த்ததால் Cement Company yard நிறைந்து விட்டதாகவும், தற்போது கழிவுகள் பெறுவது நிறுத்தப்பட்டுவிட்டதால், தற்சமயம் வேங்கடமங்கலம் கூட்டு திடக்கழிவு மேலாண்மை செயலாக்க மையத்தில் கொண்டு சேர்க்கப்பட்டு வருகிறது.

வேங்கடமங்கலம் ISWM Unit தாம்பரம், பல்லவரம், செம்பாக்கம் மூன்று நகராட்சிகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை கையாளுதல் மற்றும் இறுதியாக்கம் செய்யும் பணிக்காக ஒதுக்கப்பட்டது. அம்மையத்தின் Nodal Agency பல்லவபுரம் நகராட்சியாகும். தற்போது மூன்று நகராட்சிகளும், அங்கு எரியுட்ட தகுதியான கழிவுகளை கொட்டி சேகரித்து வருவதால் அங்காங்கு கொட்டி மேற்கொண்டு கொட்ட இயலாத நிலை ஏற்பட்டு விட்டது. இந்நிலையில் பல்லவபுரம் நகராட்சி Nodal Agency பொறியாளர் அவர்கள் 3.8.2019 அன்று கைபேசி வாயிலாக தனியாக நகராட்சிகள் மூன்றுக்கும் மேற்படி வளாகத்தில் எரியூட்டக்கூடிய குப்பைகள் சேகரிப்பு செய்வதற்கு தனித்தனியே இடம் ஒதுக்கப்பட்டு அந்தந்த நகராட்சிகள் சுத்தம் செய்து பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும், ஆங்காங்கு கொட்டி அருகில் குடியிருப்போருக்கும் நிர்வாகத்திற்கும் சிக்கல் இல்லாமல் பராமரித்துக் கொள்ளும் படி பொறியாளர் திரு. ரவிச்சந்திரன் அவர்கள் கைபேசி வாயிலாக தெரிவித்ததனைத் தொடர்ந்து செம்பாக்கம் நகராட்சிக்கொன்று ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் ஏற்கனவே குப்பைகள் கொட்டி மேடாக உள்ள இடங்களை ஒதுக்கி சமன் செய்து தொடர்ந்து இதர கழிவுகளை கொட்டுவதற்கு ஏதுவாக Chain Pokeline செயின் பொக்லைன் எந்திரங்கள் மூலம் தனியாக ஒப்பந்த ஊர்தி ஏற்படுத்தி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெற்று அவசர அவசிய பணி என்பதால் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.515 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை கையாளுதல் பணிக்கு தற்போது முதன்மை குப்பை சேகரிப்பு பணிக்காக 6 டாடா ஏஸ், 13 பேட்டரி வாகனங்கள், 25 மூன்று சக்கர சைக்கிள் மற்றும் இரண்டு பிரதான சாலைகளில் 4 மூன்று சக்கர சைக்கிள் உட்பட 30 மூன்று சக்கர சைக்கிள்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

டாடா ஏஸ், பேட்டரி வாகனங்களில் வைத்து குப்பைகளை பிரித்து வாங்கும் பணிக்கு பச்சை மற்றும் ஊதா நிறக் கூடைகள் பொறியியல் பிரிவு மூலம் வாங்கி வழங்கப்பட்டது. 20 எண்ணிக்கை 200 லிட்டர் பின் மற்றும் 20 எண்ணிக்கை 100 லிட்டர் பின் மற்றும் 50 லிட்டர் பேட்டரி வாகனங்களில் வைத்து வாங்குவதற்கு 78 பின்கள் என பெறப்பட்டு இது நாள் வரையில் பயன்பாட்டில் இருந்து வந்தது. தற்போது மேற்கண்ட அனைத்து பின் மற்றும் பேரல்களும் கைப்பிடிகள் உடைந்தும், நெளிந்தும், தொட்டிகள் ஓட்டை விழுந்து, அடிப்பகுதி தேய்ந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, பேட்டரி வாகனங்கள், டாடா ஏஸ், மூன்று சக்கர சைக்கிள்கள் என அனைத்து முதன்மை குப்பை சேகரிப்பு வாகனங்களுக்கு தேவையான Blue & Green Bins கீழ்கண்டவாறு வாங்கி வழங்கிட மன்றத்தின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள பணிந்தனுப்பப்படுகிறது.

1. 6 LCVs 6 No Barrel / each = 36 200 Litre Barrels.
2. 13 BOVs 6 No Barrel / each = 78 50 Kg Container
3. 30 Tricycles 4 No Barrel / each = 120 50 Kg Container
4. மேலும் MCC / OCCக்கு தேவையான பேரல்கள் / Bin Sintex

இதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.516 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

தமிழ்நாடு நகரயியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் இயக்குநரிடமிருந்து 2019-2020ம் ஆண்டிற்கு வருடாந்திர சந்தா தொகை செலுத்த கீழ்காணும் விவரப்படியாக கேட்பு தொகை நிர்ணயம் செய்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு. (கடிதம் ந.க.எண்.648/2018 அ2 நாள் 30.7.2019). அதன் அடிப்படையில் சந்தா தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்காக.

| ஆண்டு | சந்தா தொகை |
|---|---|
| 2019-2020 | ரூ.20000/- |

அலுவலக குறிப்பு: 2019-2020ம் ஆண்டிற்கு வருடாந்திர சந்தா தொகை செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.517 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2019-20-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைகும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.14 நேத்தாஜி தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 2 | வார்டு எண்.3 ஜெயேந்திரர் நகர் மெயின் ரோடில் ஆழ்துளை கிணறு அமைத்து, நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 3.60 |
| 3 | வார்டு எண்.14 நேத்தாஜி 1வது குறுக்கு தெருவில் 6'' விட்டமுடைய ஆழ்துளை கிணறு அமைத்து, சிறுமின்விசை மோட்டார் மற்றும் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE டேங்க் பொருத்தி குடிநீர் வழங்குதல் பணி | 2.40 |
| 4 | செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட திருமலை நகர் பூங்கா, விஜிபி சீனிவாசா நகர் பூங்கா, எம்.ஜி.ஆர். நகர் பூங்கா, அப்துல்கலாம் தெரு பூங்கா மற்றும் ராதே ஷியாம் அவென்யு பூங்கா ஆகிய இடங்களில் புதியதாக சிறுவர் விளையாட்டு சாதனங்கள் சப்ளை செய்து பொருத்துதல் பணி மற்றும் ராதே ஷியாம் அவென்யு பூங்காவில் ஏற்கனவே உள்ள பழுதடைந்துள்ள சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் பழுது பார்த்தல் பணி | 8.50 |
| 5 | காமராஜபுரம் நகராட்சி சமுதாய நலக்கூடம் மற்றும் உணவு கூடம் பழுது பார்த்தல் மற்றும் வர்ணம் பூசுதல் பணி | 3.50 |
| 6 | தாரகேஸ்வரி நகர் 3வது தெரு, அன்னை அஞ்சுகம் அம்மையார் பூங்கா மற்றும் காந்தி நகர் அண்ணா தெருவில் ஆழ்துளை கிணற்றிற்கு புதியதாக நீர்மூழ்கி மின் மோட்டார் மற்றும் இதர உபகரணங்கள் சப்ளை செய்து பொருத்துதல் பணி | 3.00 |
| 7 | வேளச்சேரி சாலை முதல் சாம்ராஜ் நகர் வரை சிமெண்ட் சாலை இருபுறம் GSB நிரப்பும் பணி | 2.00 |

**அலுவலக குறிப்பு :–**

மதிப்பீடுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.518** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/------
திருமதி. மு. ரா. வசந்தி
தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
செம்பாக்கம் நகராட்சி